நேர்மையாக கடமையை செய்வதன் மூலம் நன்மதிப்பை பெறமுடியும்

அரசுக்கும், மக்களுக்கும் இடையே போலீசார் பாலமாக திகழ வேண்டும்

பயிற்சி நிறைவு விழாவில் மு.க.ஸ்டாலின் அறிவுரை

சென்னை, பிப்.29–

அரசுக்கும், மக்களுக்கும் இடையே ஒரு நல்ல பாலமாக போலீசார் திகழ வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை வண்டலூர், ஊனமாஞ்சேரி தமிழ்நாடு போலீஸ் உயர் பயிற்சியகத்தில், பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா நேற்று நடந்தது. இந்த விழாவில் போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால், பயிற்சிக்கான தலைவர் கூடுதல் போலீஸ் துறை இயக்குநர் டேவிட்சன் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலமாக பேசியதாவது:

தமிழ்நாடு போலீஸ் உயர் பயிற்சியகத்தில் பயிற்சியை முடித்திருக்கின்ற 19 போலீஸ் துணை சூப்பிரண்டுகளுக்கும், 429 சப்–இன்ஸ்பெக்டர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். 19 துணை சூப்பிரண்டுகளில் 13 பேர் பெண்கள். 429 சப்–இன்ஸ்பெக்டர்களில் 74 பேர் பெண்கள். போலீஸ் துறையில் சமூகநீதி நிலைபெற்று வருவதன் அடையாளமாகத்தான் இதை நான் பார்க்கிறேன்.

இந்த காவல் உயர் பயிற்சியகத்தில் சட்டங்கள் குறித்த பாடங்கள் மட்டுமில்லாமல் பல்வேறு தரம் வாய்ந்த உயர்பயிற்சிகள் உங்களுக்கு கற்றுத்தரப்பட்டு இருக்கிறது.

இதன் மூலமாக சமுதாயத்தில் எழுகின்ற புதுப்புது சவால்களை எதிர்கொள்வதற்கும், அனைத்து தரப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத்தரம் மற்றும் அவர்கள் அன்றாடம் சந்திக்கின்ற பிரச்சினைகளை புரிந்து கொள்வதற்கும் வழிவகை ஏற்பட்டிருக்கிறது.

காவல் பணி என்பது ஒரு வேலை இல்லை, அது சேவை. அதை நீங்கள் முழுவதும் உணர்ந்து பணியாற்ற வேண்டும். நேர்மையாக கடமையை செய்வது மூலம், மக்களுடைய நன்மதிப்பை பெறமுடியும் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

நாட்டுக்கும், மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும்

நாட்டுக்கும், மக்களுக்கும் சேவை செய்ய வேண்டும் என்ற உள்ளுணர்வு இருந்தால் மட்டும்தான், போலீஸ் துறையினரால் தங்களுடைய பணியை திறம்பட செய்ய முடியும். நம்முடைய அரசு, அனைத்து தரப்பு மக்களுடைய உரிமைகளை பாதுகாப்பதிலும், சமூகநீதியை நிலைநாட்டுவதிலும் உறுதி பூண்டிருக்கிறது.

எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல் பொதுமக்களை நேசிப்பது, சாதி மத வேறுபாடுகளை கடந்து எந்தவித பாகுபாடும் காட்டாமல் சட்டத்தின் முன் எல்லோரையும் சமமாக நடத்துவது, சட்டத்தை மீறுபவர்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்குவது போன்ற காரணங்களால்தான், போலீஸ் துறையை 'பொதுமக்களின் நண்பன்' என்று குறிப்பிடுகிறோம். அதற்கு ஏற்றாற்போல் நீங்கள் பணியாற்ற வேண்டும்.

போலீஸ் நிலையத்திற்கு வருகின்ற ஒவ்வொரு பாதிக்கப்பட்ட நபரிடம் ஆறுதலாக பேசி, அவர்கள் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு போலீஸ் துறைக்கும், சமூகத்துக்கும் இடையேயான உறவை வலுவாக்க வேண்டும். அரசின் நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவதில் உங்களுக்கு இருக்கின்ற பங்கை ஆற்றுவது மூலமாக அரசுக்கும், மக்களுக்கும் இடையே ஒரு நல்ல பாலமாக திகழ வேண்டும்.

தொழில்நுட்பத்தை ஒரு ஆயுதமாக பயன்படுத்தி குற்றங்கள் நடப்பதற்கு எந்தவிதத்திலும் அனுமதிக்காமல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நல்லாட்சியின் இலக்கணம் என்பது மக்களுக்கு அமைதியான வாழ்க்கையை அமைத்து தருவதுதான். அப்படிப்பட்ட வாழ்க்கையை நம்முடைய அரசு அமைத்து தந்திருக்கிறது. அதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

குற்றமற்ற சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தருகின்ற அதேவேளையில், சட்டப் பரிபாலனைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் குற்றங்கள் நடக்காமல் தடுப்பதிலும் நீங்கள் முனைப்பு காட்ட வேண்டும். போலீசாரின் நலன் காக்க நம்முடைய அரசு தொடர்ந்து செயல்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

‘கார்டு, யு.பி.ஐ.’ மூலம் அரசு பஸ்களில் பயணச்சீட்டு வழங்கும் திட்டம்: அமைச்சர் உதயநிதி துவக்கினார்

சென்னை, பிப்.29–

மாநகர் போக்குவரத்து கழக மற்றும் அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்களில் மின்னணு பயணச்சீட்டு எந்திரங்கள் மூலமாக பயணச்சீட்டு வழங்கும் திட்டத்தை அமைச்சர் உதயநிதி தொடங்கி வைத்தார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி, ரூ.20 கோடி மதிப்பில் 50 புதிய பஸ்கள் பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதற்கான நிகழ்ச்சி சென்னை கிண்டி போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகத்தில் நேற்று நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்காக 50 புதிய பஸ்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும் மாநகர் போக்குவரத்து கழக மற்றும் அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்களில், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுடன் இணைந்து மின்னணு பயணச்சீட்டு எந்திரங்கள் (கார்டு, யு.பி.ஐ.) மூலமாக பயணச்சீட்டு வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

வேகமாகவும், எளிதாகவும் பயணிகளுக்கு டிக்கெட் வழங்கும் நோக்கத்தில் இந்த திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் பயணிகள் ரொக்கப் பணம், கார்டு அல்லது யு.பி.ஐ. மூலம் பணம் பெற்றுக் கொண்டு பயணச்சீட்டு வழங்குவார்கள்.

இதேபோல் சென்னை கிண்டியில் நடந்த நிகழ்ச்சியில், சென்னை, திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் அரசு தானியங்கி பணிமனைகளை ரூ.70 லட்சத்து 73 ஆயிரம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட நவீனமயமாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் பணிகளையும் அமைச்சர் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து டி.என்.பி.எஸ்.சி. மூலம் தானியங்கி என்ஜினியர், தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் பொது முதலாள் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 20 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் அவர் வழங்கினார்.

மேலும் சென்னை கிண்டியில் உள்ள போக்குவரத்து ஆணையரகத்தில் போக்குவரத்து துறை சார்பில் ரூ.41.90 கோடியில் கட்டப்பட்ட போக்குவரத்து சாலை பாதுகாப்பு ஆணையரக புதிய கட்டிடத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலி திறந்து வைத்தார்.

தபால் மூலம் டிரைவிங் லைசென்ஸ்

அதேபோல பதிவுச்சான்று மற்றும் 'டிரைவிங் லைசென்ஸ்' ஆகியவற்றை விரைவு அஞ்சல் மூலமாக அனுப்பும் பணியையும் அவர் தொடங்கி வைத்தார். இதன் மூலம் மாநிலத்தில் உள்ள 91 ஆர்.டி.ஓ. அலுவலகங்கள், 54 பகுதி அலுவலகங்கள் ஆகியவற்றில் இருந்து ஒப்பளிக்கப்படும் பதிவுச் சான்று மற்றும் டிரைவிங் லைசென்ஸ் ஆகியவை இனி விரைவு தபால் மூலமாகவே விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., போக்குவரத்துதுறை கூடுதல்தலைமை செயலாளர் க.பணீந்திரரெட்டி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மை செயலாளர் பெ.அமுதா, போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புத் துறை ஆணையர் சண்முகசுந்தரம், மாநகர் போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண்மை இயக்குநர் க.குணசேகரன், அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் இரா.மோகன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

‘‘தி.மு.க.வை இல்லாமல் ஆக்கிவிடுவோம் எனக் கூறியவர்கள் வரலாற்றில் காணாமல் போய்விட்டார்கள்’’: மோடிக்கு டி.ஆர்.பாலு பதில்

சென்னை, பிப்.29–

தி.மு.க.வை இல்லாமல் ஆக்கி விடுவோம் என கூறியவர்கள் வரலாற்றில் காணாமல் போய் விட்டார்கள் என்று பிரதமர் மோடி சவாலுக்கு டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தி.மு.க. பொருளாளரும், நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:– அரசு முறை பயணமாகத் தமிழ்நாட்டுக்கு வந்து, அரசியல் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு, தான் பிரதமர் என்பதையே மறந்து, அரசியல் அவதூறுகளை அள்ளி இறைத்துவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர் மோடி.

திருப்பூர் கூட்டத்தில் ஜெயலலிதாவை வானளாவப் புகழ்ந்தும், திருநெல்வேலி கூட்டத்தில் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சித்தும் பேசிவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர்.

2016ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, 'ஜெயலலிதா ஆட்சியில் தமிழ்நாட்டில் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இந்த லஞ்சத்தினால் தமிழ்நாடே முற்றிலும் பாதித்துப் போய் இருக்கிறது' என ஒசூரில் நின்று கடுமையாக விமர்சித்த மோடிதான், இன்றைக்கு பல்லடத்தில் பல்டி அடித்திருக்கிறார்.

இந்தியா கூட்டணிக்கு அடித்தளம் அமைத்தவர் ஸ்டாலின்

தனக்கு எதிரியே இல்லை என்ற இறுமாப்பில் இருந்த பாரதிய ஜனதாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து 'இந்தியா' கூட்டணி அமைக்க அடித்தளம் அமைத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பது தான் பிரதமர் மோடியின் கோபத்துக்கு காரணம்.

பின்னலாடை வர்த்தகச் சந்தைக்கான வாசலை வங்கதேசத்துக்குத் திறந்துவிட்டு, திருப்பூரை வஞ்சித்த மோடியால், கொங்கு மண்ணின் பெருமையை எப்படிப் பேச முடிகிறது?. மதுரையில் ஒரே ஒரு எய்ம்ஸ் கூட திறக்க முடியாத உங்களால் மதுரைக்கு எப்படி வர முடிகிறது?

பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஒரு பைசாவைக்கூடத் தமிழ்நாட்டிற்குத் தர மறுத்த நீங்கள், தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் எப்படி வருகிறீர்கள்? பேரிடர் நிதியைக் கூட தராமல் 'அல்வா' கொடுக்கும் மோடி ஆட்சிக்கு இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் 'அல்வா' கொடுப்பார்கள். ஜி.எஸ்.டி. நிதி முதல் பேரிடர் நிதி வரை தராத மத்திய அரசின் ஏமாற்று வேலையைத் தி.மு.க. தோலுரிப்பதால், மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது என பொய்யைச் சொல்லியிருக்கிறார்.

தி.மு.க.வை இனிப் பார்க்க முடியாது. இனித் தி.மு.க எங்குத் தேடினாலும் கிடைக்காது எனச் சொல்லியிருக்கிறார் பிரதமர் மோடி. தி.மு.க. அழிந்து போகும், தலைதூக்காது என தி.மு.க. உருவான 1949ம் ஆண்டில் இருந்து இன்று வரை 74 ஆண்டு காலமாகப் பலர் பேசிக் கடந்து சென்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், தி.மு.க. என்ற இமயமலை இன்றும் வரலாற்றில் நிமிர்ந்து நின்று கொண்டு தான் இருக்கிறது.

தி.மு.க. வை யே இல்லாமல் ஆக்கி விடுவாராம். சவால் விட்டுள்ளார். இப்படிச் சென்னவர்கள் எல்லாம் வரலாற்றில் காணாமல் போய் விட்டார்கள். அந்தவரிசையில் அவரும் விரைவில் இணைந்து விடத்தான் போகிறார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

CHANGE OF NAME

I, Arvind M S/O S Mahaveer Jain, R/o 111 A Sarvodaya Nagar, 3rd Street Near Baptist Church, New Ellis Nagar, Gnanaolivupuram, Madurai, Tamil Nadu- 625016, have changed my name and shall hereafter be Known as Arvind Jain M.

பெயர் மாற்றம்

SIMRAN PAREEK, த/பெ. Atul Pareek, பிறந்த தேதி: 22/05/1999, எண். 90A, மௌனசாமி மடம் தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர், சென்னை – 600053, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி MALINA என்று அழைக்கப்படுவேன்.

SIMRAN PAREEK

CHANGE OF NAME

I, T. Raj S/O Thomas, R/o 92/42 Mangal Amman Koil Street St. Thomas Mount, Alandur, Kancheepuram, Tamil Nadu- 600016, have changed my name and shall hereafter be Known as T. Irudaya Raj.

CHANGE OF NAME

I, Manohar Singh S/O Gorthen Singh, R/o 3, Kathir Nagar Extn 8th Street, Kangayam Road, Tiruppur, Tamil Nadu- 641604, Declare that name of Mine and My Minor Son has been wrongly written as M Manohar Singh and M Ayesh Singh in my minor Son Ayush Kumar, aged about 15 Years. In his 10th Class Certificate. The actual name of Mine and My Minor Son are Manohar Singh and Ayush Kumar, which may be amended accordingly.

பொது அறிவிப்பு

சிஃபோரம் ஷிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்-ன் (CIN: U18209TN1987PTC014898) கலைப்பு அலுவலரான அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர் ஆகிய நான் இதன் மூலம் அறிவிப்பதாவது IBBI (கலைப்பு நடைமுறைகள்) I & B Code, ஒழுங்கு முறைகள் 2016-ன் படி இந்த கார்பொரேட் கலைப்பு நடைமுறைகள் முடிவடைந்து விட்டது மற்றும் சுமி பெனிஃபிட் கலைப்புக்கான (Distribution) விநியோகப்பங்கீடு நிர்ணயிக்கும் ஆணையத்திடம் (Adjudicating Authority) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

-ஒப்பம்-
அமீர் ஹம்சா அலி அப்பாஸ் ராவுத்தர்
கலைப்பு அலுவலர், சிஃபோரம் ஷிங் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்-
பதிவு எண். IBBI/IPA-001/IP-P01727/2019-2020/12620
R094, 5/30A யுனிட் எண்டிசேல், மடிப்பாக்கம் அஞ்சல், சென்னை - 600 127 (M) : 99308 48070
தேதி : 29.02.2024, இடம் சென்னை

ESAF ESAF SMALL FINANCE BANK
Regd. Office: ESAF Bhavan, Mannuthy, Thrissur- 680 651, Kerala.

தங்கநகை ஏல அறிவிப்பு

எஸ்ஏஎப் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் உடன் உறுதிசெய்யப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கிளை/கள் உடன் பெறுபவர்களால் மீட்கப்படாமல் மீண்டும் மீண்டும் நினைவூட்டியும் மற்றும் அறிவிப்புகள் கொடுத்து இருந்தாலும் கூட, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி ஏலம் விடப்படும் என்று சம்பந்தப்பட்ட அனைவரும் தகவலை தெரிந்துகொள்வதற்காக இதன்மூலம் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது:

ஏலம் விடப்படும் தேதி : 12-03-2024 நேரம் : 2 PM TO 5 PM
நடைபெறும் இடம் : இ-ஏலம் மூலம்
விபரங்களை : https://gold.matexnet.org/ Contact No. 9500173386/9962979770

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பார்த்து மற்றும் இ-ஏலத்தின் முழு விவரங்களுடன் இ-ஏலத்திற்காக ஏலம் கேட்பவராக பதிவு செய்வதற்கு தயவுசெய்து மேலே கொடுக்கப்பட்டுள்ள தளத்திற்கு வருகைதாருங்கள்

BRANCHES & LOAN ACCOUNT NUMBERS

Andipatti: 75230000055315, 164700, 63230000022085, 75230000050844, 107929,101310, **Anthiyur:** 75230000161395, 115633, 63230000010358, 75230000105693, 63220000902829, 75230000144088, 184682, 53089, 170718, 148291, 119916, 122060, 122070, 120893, 151884, 151914, 151924, 151014, 161405, 51573, 51603, 35033, 181227, 63230000007594, 75230000178333, **Batlagundu:** 75220001811715, 75230000021400, 21420, 74829 **Cheyyar:** 75230000184002, **Elavamalai:** 63230000004680, 75230000157573, 157993, 157853, **Elumathur:** 75230000166576, 63230000014021 **Kanchipuram:** 75230000045324,142662,184892,48809, 147073, 180519, 163622, 165138, 165108, 112879, 173973, 165688, 167274, 21510, 162223, 162243, 173763, 45384 106451, 131503, 138220 **Kangeyam:** 75230000004493, **Kanyakumari:** 75230000148551, 148531 **Kovalam:** 75230000057772, 63220000874670, 75230000167924, 184562, 19864, 154099 **Nagercoil:** 75230000015852, **Palani:** 63230000041489, 75230000112169, 112739 **Palayamkottai-Tirunelveli:** 75230000164630, 63000,157893 **Panruti:** 63230000320534, 75230000175259 **Reddiarchattiram:** 75230000179602 179732 **Singanallur (Ondi Puthur):** 75230000114845, **Thakkalai:** 75230000183663, 75220001815498, 75230000114685, 129727, 35603 **Thalakkarai:** 63230000337683, 75220001419783, 63230000334528, 343691, 75230000139158 **Thiruvannamalai:** 75230000055705, 55875, 79150, 14163, 162933, 112369, 31651, 31801, 150446 **Thondamuthur:** 75230000141053, 99962, 06309, 136503, 161185, 55895, 55935 **Thoothur:** 75230000185040, 43158, 115683, 39626, 31781, 124946, 26641, 123618, 126153, 52131, 171016 **Vedasandur:** 75230000173888, 181887, 181927, 142992, 143360, 171966, 18416, 183083 **Vellanaipatti:** 75230000185650, 106211, 106301, 168173, 168233, 116632, 186188, 149499, 149539, 146604 **Alangulam:** 63230000333640, 63230000015559, 75230000160877, 117979 **Annur:** 63230000034203, 38395, 75230000037280 75230000100332, 117110, 137632 **Arani:** 75230000010031, 76955, 57712, 34125 75230000154759, 183223, 119246, 180969, 180979, **Aruppukottai:** 63230000012064, 75230000133499, 100642, 112159, 116742 **Chennai - Villivakkam:** 75230000099662, 99692, 63230000349020, 344219, 331923, 63230000010568 **Chennai-Annanagar:** 75230000110513, 110583, 162563, 162573, 162593 **Chinnamannur:** 75220001374936, **Cuddalore:** 75230000168533, 171316, 158272, 169781 **Gopichettipalayam:** 75230000178243, 152223, 75230000026021, 63230000343391 **Katpadi:** 75230000032789, 63230000042517, 40201 **Kattankulathur:** 75230000012997 **Kovilpatti:** 75230000016560, 67913, 29175, 53289, 11159, 96467, 34205, 42870, 75230000109885, 113417, 114465, 75230000004533, 63230000043665 **Mallankinaru:** 75230000080127, 57727, 57742, 57767, 57861, 57921, 80087, 80097, 63230000336244, 337023, 75230000102878, 127831, **Pudukkottai:** 63230000348782, 345337, 75230000069099, 75287 **Puliankudi:** 75230000135035, 135065, 177485, 168063, 129787, 124556, 171646, 184142, 169501, 154539, 154569, 164230, 135475, 63220000906402, 909446, 63230000325435, 320134, 63230000000824, 9441, 75230000049247, 20922, 75230000008005 **Thanjavur:** 75230000071024 **Thirpparappu:** 75230000162873 **Tindivanam:** 75220001527200 **Tiruchirapalli:** 75230000172974, 149169, 149759, 150046, 174061, 174071, 113437, 113457, 114355 **Tirukalukundram:** 63230000044243, 32906, 75230000132891, 103626, 815718 **Tirukkoyilur:** 75230000114635, 75230000114635, 75220001812163 **Udumalaipettai:** 75230000149369, 125444, 137072, 126463 **Ulundurpettai:** 75230000056463, 75230000135555, 63230000332482 **Uthiramerur:** 75230000174801, 140765, 131583, 131673, 131153, 119446, 121722, 182255. 149669, 75230000051753, 96577, 30303, 59598 **Anamalai:** 75230000111201, 112739. 179282, 63230000046380, 00047, 75230000097935 **Chennai - Mogappair East:** 63230000036419, 75230000145716 **Chennai - Velachery:** 75230000164380 **Coimbatore - R S Puram:** 63230000039813, 39823 75230000122140, 122180, 184342 **Coimbatore Trichy Road:** 63230000343491, 75230000162643, 182715 **Colachel:** 75230000097905, 102168,112489, 129237, 132751, 26281, 102508, 96227, 103176, 169081, 169091 **Dharapuram:** 63230000031708, 75230000039316, 112189 **Dindigul:** 63230000007734, 41839, 75230000115833, 156565, 176357, 060535, 161025, 168203, **Elayamuthur:** 75230000076345 **Erode:** 75230000180229, 181767, 149739, 165308, 150556, 150586 **Kulasekaram:** 75230000035483, 128719 **Kuniyamuthur:** 75230000106131, 138030, 63230000041319, 43355, 75230000160837, 159850 **Masagoundenchettipalayam:** 75230000156195, 42670, 146394, 146434 **Mettupalayam:** 75230000106251, 147573 **Mottanuthu:** 75230000165328, 63230000010368 13323, 75230000105993, 154989, 131883, 19924 **Pollachi:** 75230000149639 **Poomalaikunda:** 63230000036619, 28754 **Salem:** 75230000131063, 131083, 131093, 148481, 1410450, 131123, 18226, 159210, 79450, 164520 **Sathyamangalam:** 63230000318489, 75230000098443, 63230000325855, 07274, 75230000111311, 154689, 123818, 104674, 104714. 104724, 173413, 181387 **Thuneri:** 63230000020819, 32076, 34343, **Unjampatty:** 75230000016130, 63230000014721, 52991, 127961 127971, 127981 **Vadapudur:** 75230000136873, 113097, 165038 166716, 171046, 171086, 156805 **Viluppuram:** 63230000349050.

மொத்த நிலுவைத் தொகையை செலுத்தி ஆபரணங்களை மீட்டெடுக்க ஆர்வமுள்ள வாடிக்கையாளர்கள், சம்பந்தப்பட்ட கிளைகளில் ஏலம் விடும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்பு அல்லது அதற்கு முன்பு இதை செய்யலாம்.

ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலம் கேட்பவர்கள் தங்களின் கேஒய்சி (KYC) ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட அலைபேசி/நிறுவனத்தி ற்கு நிலையான எண் கட்டாயமாகும். ஏலத்தில் பங்கேற்பதற்கு முன்பு ஏலம் கேட்பவர்கள் ரூ. 50,000 மொத்த தொகையை ஈஎம்டி ஆக டெபாசிட் செய்ய வேண்டும்.

திருச்சூர் கையொப்பம்
தேதி: 29/02/2024 அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடுபவர்

IndiaShelter இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட்.

பதிவு அலுவலகம்: வேலு தளம், பாகம் – 10, செக்டர் – 44, நிர்மல் டுரேஷனர் ஏரியா, குர்கான், ஹரியானா – 122002
நிர்வாக அலுவலகம்: வீட் காம்பௌண்ட், வேலு தளம், எண்.4/319, ஜிஎன்டி சாலை, மாடல் நகர், பரமேஸ்வரி, செட்டிநிலம், சென்னை, தமிழ்நாடு 600 052.

கோரிக்கை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடன்பெறுதல் சொத்துக்களை செக்யூரிடைசேஷன் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடன்பெறுதல் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட் (IHFCL) மூலம் கடன் பெற்ற கீழ் கண்ட கடன்தாரர்கள், IHFCL-க்கு தாங்கள் செலுத்த வேண்டிய மாதாந்திர தவணைகளை (EMI) செலுத்தத் தவறிவிட்டனர், எனவே தவணைகளின் கடன் வரைக்கு நேரில் கடிதப்பட்டும் வழிகாட்டு நெறிகளின்படி செல்லப்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது (கடன்தாரர்கள்) தாங்கள் சொத்துக்களை IHFCL-க்கு ஈடாக வழங்கியுள்ளனர், அது குறித்து விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கடன் விவரங்கள் மற்றும் நிலுவைகளில் வரை தொகைகள் மற்றும் கடன்தாரர்கள் IHFCL-க்கு செலுத்தவேண்டிய செலுத்தவேண்டிய தொகைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 2002ம் ஆண்டு கடன்பெறுதல் சொத்துக்களை செக்யூரிடைசேஷன் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடன்பெறுதல் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் இந்த சட்டத்தின் கீழ் நடைபெற்ற கடன் ஒப்பந்தங்களான IHFCL-இன் கீழ்கண்டவாறு கடன்பெறப்பட்ட அதிகாரிகளான, பிரிவு 13 கடன்தாரர்களுக்கு எதிராக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளார் என்பதை கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. பிரிவு 13 கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு இரண்டு 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தத் தவறினால், SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)ன் துணைப்பிரிவு (4) ன் கீழ் கிடைக்கப்பெற்ற கடன் தீர்த்தலுக்கு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவார், எனவே, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை தொடர்ந்து பரிவர்த்தனைகளும் மேற்கொள்ள வேண்டாம் என்று பொதுமக்கள் பொதுவாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்)/ சட்டவாரிசு/சட்டப் பிரதிநிதிகள்/ கடன் வரைக்கு எண்.	எண்ம தேதி/ டிமாண்ட் நோட்டீஸ் தேதி	தொகை	கடன்பெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்துகள்)
வடமலை வே. வே. மணிவண்ணன் கடன் வரைக்கு எண். LA11CLLON500000504 8285	08-02-2024 & 09-02-2024	09.02.2024 தேதியின்படி ரூ.490880/- (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்) 07.02.2024 முதல் வட்டி மற்றும் பிற வட்டிகளும் மற்றும் தொகையை வெளுத்து தேதியன்று வெளுத்து வேண்டும்	கீழ் குறிப்பிடும் அசை பத்திரங்கள், நிலம் மற்றும் கட்டிடம், எண்.88/2411, பட்டா எண் எண். 88/2411A1, மிகை நிலம் 2180.5 சதுர அடி, இந்த வெளுத்து திருவாரூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, நத்தம் கிராமத்தில் அமைந்துள்ளது. எல்லைகள் : கிழக்கு : விவசாய நிலம், மேற்கு : சுவர்மீனா சேரியின் தெரு, வடக்கு : நிலம் 1 கட்டிடம், தெற்கு : கட்டிடமுடன் கூடிய

இடம் : திருவண்ணாமலை, தேதி : 29.02.2024 (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட்.

VASTU HOUSING FINANCE வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: யூனிட் எண். 203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட், ஜுக்காரியா பண்டர் மார்க் சாலை, செவ்ரி (மேற்கு), மும்பை 400 015, மகாராஷ்டிரா
CIN No.: U65922MH2005PLC272501

அசையாச் சொத்தை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

2002ம் ஆண்டு கடன்பெறுதல் சொத்துக்களை செக்யூரிடைசேஷன் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு

கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகள் ஈடாகப் பெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன, அதனை வாரியு நுதனசீரு வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) ஆகிய கீழ்கண்ட கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) மீது ரூ.ஈடுபெற்ற கடன் தொகையை திரும்பச் செலுத்தக் கோரி கடிதம் வழங்கப்பட்டுள்ளது. கடன்தாரர்(கள்), உத்தரவாததாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாக இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. பிரிவு 13 கடன்தாரர்கள் தங்கள் பொறுப்புகளுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு இரண்டு 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தத் தவறினால், SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)ன் துணைப்பிரிவு (4) ன் கீழ் கிடைக்கப்பெற்ற கடன் தீர்த்தலுக்கு வழங்கப்பட்டுள்ள எந்தவொரு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவார், எனவே, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை தொடர்ந்து பரிவர்த்தனைகளும் மேற்க